# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2086 - 2018 අගෝස්තු මස 24 වැනි සිකුරාදා - 2018.08.24

*2086 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 156 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | | |


*__கவனிக்க.__- இலங்கை மின்சாரம் (திருத்தம்) சட்டமூலம் 2018, ஒகத்து மாதம் 18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை __வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்__. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு __இரண்டு வாரங்களுக்கு முன்னர்__, அதாவது 2018, செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஒகத்து மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

155-B81442-353 (2018/08)

# நானாவித அறிவித்தல்கள்

## கொழும்பு மேல் மாகாண உயர் நீதிமன்றம் (சிவில் விசாரணை நீதிமன்ற நீதித்துறை செயல்படுத்தல் சம்பந்தமான) அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 529 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 270 மற்றும் 272 ஆம் பிரிவுகளின் கீழ் கணக்கை மூடிவிடுவதற்கான விண்ணப்பம் சம்பந்தமாக.

வழக்கு இல.: HC (CIVIL) 41/2018/CO
விடயம் : கணக்கை மூடுதல்
பெறுமதி : ரூபா 20,85,620 (USD 13,031.06)
நடைமுறை : சாதாரணம்

வரையறுக்கப்பட்ட க்ரோ சொயில் சப்ஸ்ட்ரேட்ஸ் (பிரைவேட்) கம்பனி, இல. 111/2, ஹெந்தல றோட், வத்தளை.

மற்றும்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பகுதியின் மற்றும் ஏ விதிமுறை சட்டத்தின் கீழ் கௌரவ நீதிமன்றத்தினால் கணக்கை மூடி விடுவதற்கான விண்ணப்பம் சம்பந்தமாக.

வரையறுக்கப்பட்ட பொலீ கிரியேஷன்ஸ் சப்ஸ்ட்ரேட்ஸ் (பிரைவேட்) கம்பனி,
இல. 848/5, நீர்கொழும்பு வீதி,
மாபோல, வத்தளை.

முறைப்பாட்டாளர்

மேற்கூறப்பட்ட கம்பனி மூலம் கணக்கை மூடிவிடுவதற்காக 2018, யூன் மாதம் 06 ஆந் திகதி மேலே கூறப்பட்ட முறைப்பாட்டாளர் அன்டனி ஹியுபட் நிர்மலன் துரைசிங்கம் அவர்களால் (சிவில் விசாரணை நீதிமன்ற நீதித்துறை செயல்படுத்தல் சம்பந்தமான), கொழும்பு மேல் மாகாண உயர் நீதிமன்றத்தில் முறைப்பாடொன்று முன்வைக்கப்பட்டுள்ளதுடன் அந்த முறைப்பாடு கௌரவ நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக 2018, செத்தெம்பர் 26 அன்று முடிவக்கு கொண்டு வரப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது. மேற்படி முறைப்பாடு சம்பந்தமாக கௌரவ நீதிமன்றத்தால் ஆணை பிறப்பிப்பது சம்பந்தமாக கட்சிக்காரராக அல்லது எதிராக இருப்பதற்கு எதிர்பார்க்கும் மேற்படி கணக்கை மூடி விடுவதற்காக முன்மொழியப்பட்ட நிறுவனத்தின் யாராவது ஒருவருக்கு அல்லது கடன் பெற்றவருக்கு அல்லது வாடிக்கையாளருக்கு மேற்படி முறைப்பாடு விசாரணை செய்யப்படும் நேரகாலத்துள் தன்னால் அல்லது தனது சட்டத்தரணி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட சட்டத்தரணி ஊடாக சமுகமளிக்க முடியும் என்பதுடன் கணக்கை மூடி விடுவதற்காக முன்மொழியப்பட்ட நிறுவனத்தின் யாராவது ஒருவருக்கு அல்லது கடன் பெற்றவருக்கு அல்லது வாடிக்கையாளருக்கு முறைப்பாட்டின் பிரதியொன்று தேவையாயின் இங்கே கீழே கையொப்பமிட்டுள்ளவரால் குறிக்கப்படும் கட்டணத்தை செலுத்தி அதன் பிரதியை பெற்றுக்கொள்ள முடியும்.

ஒப்பமிடப்பட்டுள்ளது:
ஷான்யா விக்ரமரத்ன,
சட்டத்தரணி,
61, டி. எஸ். பொன்சேக்கா வீதி,
கொழும்பு - 5.
தொலைபேசி: 0772265649

**குறிப்பு**.- முறைப்பாடு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படும் நாளில் கௌரவ நீதிமன்றத்துக்கு சமுகமளிப்பதற்கு எதிர்ப்பார்ப்பவராக இருப்பின் மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தரணியான ஷான்யா விக்ரமரத்ன அவர்களுக்கு அவ்வாறு செய்ய அவருக்குள்ள நோக்கம் பற்றி எழுத்து மூலம் அவருக்கு வழங்க வேண்டும். அல்லது பதிவுத் தபால் மூலம் அவருக்கு அனுப்ப வேண்டும். அந்த அறிவித்தலில் அதனை அனுப்புபவரின் பெயர், முகவரி, அது நிறுவனமாக இருப்பின் அதன் பெயர், முகவரி என்பன குறிப்பிடப்பட வேண்டும் என்பதுடன் அதன் வாடிக்கையாளரினால் அல்லது கம்பனியினால் அல்லது (அவ்வாறிருந்தால்) அவரின் அல்லது அந்நிறுவனத்தின் சட்டரீதியான சட்டத்தரணி மூலம் மேற்படி அறிவித்தல் கையொப்பமிடப்பட்டு 2018, செத்தெம்பர் 25 ஆந் திகதி மாலை 6 மணிக்கு முன்பாக மேற்படி சட்டத்தரணியிடம் கட்டாயம் கொடுக்க வேண்டும். அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்புவதாயின் மேற்கூறப்பட்ட நேரத்துக்கு முன்பாக மேற்குறிப்பிட்ட சட்டத்தரணிக்கு மேற்படி அறிவித்தல் கிடைக்கும்படியான கால எல்லைக்குள் கிடைக்கச் செய்ய வேண்டும்.

ஒப்பமிடப்பட்டுள்ளது:
ஷான்யா விக்ரமரத்ன,
சட்டத்தரணி,
61, டி. எஸ். பொன்சேக்கா வீதி,
கொழும்பு - 5.
தொலைபேசி: 0772265649

8-825

## மேல் மாகாண உயர் நீதிமன்றம் கொழும்பில் இடம்பெற்ற சிவில் அதிகார வழக்கு விசாரணை மனு விளம்பரம்

வழக்கு இல.: 28/2018/CO

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் பிரிவுகள் 270 (அ) மற்றும் /அல்லது 270 (ஈ), 270 (f) உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலக்கம் 534 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பீக் குலோதின் பிறைவேட் லிமிட்டெட் நீதிமன்றம் மூலம் களைத்து விடுதல் தொடர்பான விடயம் தொடர்பில்.

பீக் குலோதின் பிறைவேட் லிமிட்டெட்,
மெல்பட் எஸ்டேட்,
கெமுனுபுர,
கொத்தலாவல,
கடுவெல.

மனுதாரர்

மேற்படி பெயருடைய கம்பனியை மூடிவிடுவதென்று மனுதாரர் கொழும்பில் இயங்கும் மேல் மாகாண உயர் நீதிமன்றத்திற்கு 2018, மாச்சு மாதம் 29 ஆந் திகதி அறிவித்துள்ளதுடன் அது ஒரு சிவில் அதிகார வழக்காகும் என்றும் மேற்குறிப்பிட்ட மனுதாரர் தெரிவித்துள்ளார் அத்துடன் அம்மனுதாரர் இவ்விடயம் 2018, செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி விசாரிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக நலன் பெறுபவர் அல்லது கம்பனிக்காக பங்களிப்புச் செய்யவிரும்புபவர்கள் ஆதரவாகவோ அல்லது எதிராகவோ இம்மனுவிற்காக மன்றிற்கு வந்து இவ்விடயம் எடுக்கப்படும் போது சமுகம் தந்து கருத்துத் தெரிவிப்பதற்கு தமது ஆலோசனைகளுடன் சமர்ப்பிப்பதற்கு பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணிகள் மூலம் இவ்விடயம் தொடர்பாக கோருமிடத்து அம்முறைப்பாட்டின் பிரதிகள் சம்பந்தப்பட்ட நலன்விரும்பிகள் பங்களிப்புச் செய்ய விரும்புவர்களுக்கு கம்பனியின் கீழ் கையொப்பமிட்டுள்ள மனுதாரர்களின் கட்டணங்களைச் செலுத்தி மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக பிரதியினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கையொப்பம்:
சிரிமல் வீரக்கொடி,
மனுதாரரின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி,
இல. 494/2B, என். டீ. பெரேரா மாவத்தை, அங்கொட.

**குறிப்பு**.- எவரொருவர் மேற்குறிப்பிட்ட விண்ணப்பம் தொடர்பாக அவர் நீதிமன்றத்தில் விசாரிக்கும் போது சமுகம் தர விரும்பின் மனுதாரருக்கு அது பற்றிக் கட்டாயம் அன்றைய தினம் அவரது அக்கம்பனியின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணிக்கு எழுத்து மூலம் அறியத்தர வேண்டும். அவ்வறிவித்தலில் அவரது பெயர், விலாசம் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அல்லது கம்பனியில் அதன் பொறுப்பில் உரியவராக இருந்தால் அத்துடன் அது அங்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது தபாலில் அனுப்பப்பட்டிருப்பின் அது அன்று ஒரு மணித்தியாலத்திற்கு முன்பு நேரகாலத்துடன் கிடைக்கப்பெற்றிருக்க வேண்டும். ஒரு மணிக்குப் பின்னர் மாலை நேரம் என்பது (பி. ப. 01) 2018, செத்தெம்பர் 8 ஆந் திகதியாகும்.

மனுதாரர் சட்டத்தரணி.

8-897